> “ வனப் பரப்பு சுருக்கப்படுவதால் தான் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் மோதல் ஏற்படுகிறது ”

ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் வாங்கியது. இது குறித்து மாவட்ட வன அதிகாரியிடம் புகார் தெரிவித்தோம். பழங்குடி மக்களைத் தவிர வேறு யாரையும் அந்தப் பகுதிகளுக்குள் அனுமதிக்க கூடாது என்று வனத்துறையினருக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் சிறிது காலத்தில் அந்த உத்தரவு காற்றில் பறந்து போனது. அதன் பிறகு காரமடை பகுதியில் 101 ஏக்கர் நிலம் ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள பழங்குடி மற்றும் ஆதிவாசி மக்கள் மிகவும் வறுமையில் வாடுபவர்கள். அவர்களில் சிலர் வெறும் பீடி, சிகரெட் மற்றும் சாராயத்திற்கு தங்களது நிலத்தை விற்றுள்ளனர். கோவையின் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் மற்றும் காரமடை பகுதியில் உள்ள 36 பஞ்சாயத்துகளில் மட்டும் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 320 பழங்குடி மக்கள் இருக்கின்றனர். ஆனால், அரசு ஆவனத்தில் வெறும் பத்தாயிரம் மக்கள் மட்டுமே இருப்பதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது



யோகநாதன்



முருகவேலு

சமீபத்தில் ஆலங்கட்டி புதூர் பகுதியில் 60 ஏக்கர் நிலத்தை பத்து பத்து சென்ட்டாக பிரித்து பிளாட் போட்டு விற்பனை செய்து வருகிறது ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்று. அதுமட்டுமல்லாமல் இந்தப் பகுதிகளில் பண்ணை வீடுகளும் கட்டப்பட்டு வருகிறது. இந்த மலை அடிவாரப் பகுதிகள் அனைத்தும் யானைகளின் வழித்தடம். பழங்குடி மக்கள் இங்கு இருந்தவரை யானைகளுக்கும் மற்ற காட்டு விலங்குகளுக்கும் எந்த பாதிப்பும் இல்லை. தற்போது இந்த நிலங்கள் அனைத்தும் பிளாட்டுகளாக மாறி வருவதால் யானைகளின் வழித்தடம் மறிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் யானைகள் ஊருக்குள் புகும் சம்பவங்கள் நடக்கின்றன.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, பழங்குடி மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தையும் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும். இதனை கேரள அரசு 67 சதவிகிதம் அமல் படுத்தியுள்ளது. கர்நாடக அரசு 56 சதவிகிதமும், ஆந்திர அரசு 62 சதவிதமும் அமல்படுத்தியுள்ளது. ஆனால் தமிழக அரசு ஒரு சதவிகிதம் கூட அமல்படுத்தவில்லை. அதோடு பழங்குடி மக்களிடம் இருந்து அநியாயத்திற்கு பறிக்கப்படும் நிலங்களை மீட்கவும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ரியல் எஸ்டேட் நிறுவனங்களை தொடர்ந்து தற்போது கோவையில் உள்ள பெரிய மருத்துவமனைகள் மற்றும் தொழில் நிறுவனங்களும் பழங்குடி மக்களின் நிலங்களை வனத்துறை அதிகாரிகளின் துணையோடு அபகரித்து வருகின்றனர். இந்த நிலங்கள் அனைத்தும் முழுவதுமாக பழங்குடி மற்றும் ஆதிவாசி மக்களுக்குத்தான் சொந்தம் என்பது 1967-ம் ஆண்டின் நிலப்பதிவு சிட்டாவை எடுத்துப் பார்த்தாலே தெரிந்துவிடும். மாவட்ட நிர்வாகம், வனத்துறை மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தப் பலனும் இல்லை. ஆகையால் தற்போதைய அரசு இந்த விவகாரத்தை தீவிரமாக ஆராய்ந்து எங்கள் நிலங்களை மீட்டுத் தர வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார் முருகவேலு.

சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன் இதுபற்றி நம்மிடம்,

“வனத்தை ஒட்டி உள்ள இந்தப் பகுதிகள் தற்போது பிளாட்டுகளாக மாறி வருவதால், வனத்தில் உள்ள வனவிலங்குகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனால்தான் யானை, சிறுத்தை போன்ற வன விலங்குகள் ஊருக்குள் வருகின்றன. வனப் பரப்பு சுருக்கப்படுவதால் தான் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் மோதல் ஏற்படுகிறது. இதில் உயிரிழப்பு என்னவோ மனிதனுக்கு தான். ஆகையால் அரசு உடனடியாக இந்தப் பிரச்னைக்கு தீர்வு கண்டு பழங்குடி மக்களின் நிலங்களை மீட்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சமூக ஆர்வலர்கள் நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழி இல்லை” என்றார் யோகநாதன்.

வனத்துறை அதிகாரிகள் தரப்பில் கேட்டபோது,

“கடந்த ஆட்சியில் தி.மு.க. கொடியை காரில் கட்டிக்கொண்டு வலம் வந்த பல ரியல் எஸ்டேட் அதிபர்கள் தற்போது அ.தி.மு.க. கொடியை கட்டிக்கொண்டு வலம் வருவதோடு, தங்களை அ.தி.மு.க.வின் முக்கிய புள்ளியாகக் காட்டிக்கொள்கின்றனர். அவர்கள் நடத்தும் அனைத்து விழாக்களிலும் முதல்வரின் படங்கள் பெரிய அளவில் இடம் பெறுவதால் நேர்மையான அதிகாரிகள் கூட அவர்களை நெருங்க அஞ்சுகின்றனர். இதனைத் தடுக்க அரசு தனியாக ஆணையம் ஒன்றை அமைத்து விசாரணை மேற்கொள்ள வேண்டும். ரியல் எஸ்டேட் மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து பழங்குடி மக்களின் நிலங்களை மீட்டு எடுக்காவிட்டால் வனத்தையும் வன விலங்குகளையும் காப்பாற்ற முடியாது” என்று எச்சரித்தார் அந்த அதிகாரி.

தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?எ

■

படங்கள்: எம்.குமரேசன